22.09.2025

O.S.No. 142/2022

PW1- முருகன் – த/பெ. முத்துசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 22.09.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. பிராது தபசில் சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் என் அப்பா வழியிலும், தாத்தா வழியிலும் பாத்தியப்பட்டது.

2. என்ன வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நடைபாதை சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. என் உடன் எத்தனை பேர் பிறந்தார்கள் என்றால் 6 நபர்கள். அவர்கள் பெயர்கள் முறையே சின்னச்சாமி, குமாரசாமி, நான் முருகன், வெங்கடாசலம், ராதாகிருஷ்ணன் மற்றும் சங்கர் ஆகும்.

4. எனக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 3 பிள்ளைகள் முத்துசெல்வி(1) , மகாராஜா (2), முத்துக்குமார் (3) ஆகும்.

5. எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் யார் அரிசிக்கடை வைத்துள்ளார் என்றால் நானும், மகாராஜாவும் வைத்துள்ளோம்.

6. என் வீட்டின் சர்வே எண்ணும், எல்கை மால் தெரியுமா என்றால் சர்வே எண்.72 மற்றும் 73. எல்கை மால் வடக்கே மகன் முத்துக்குமாரும், கிழக்கு குமாரசாமியும், மேற்கே முருகன் நானும், தெற்கே கடைகள் உள்ளன. இந்த எல்கை மால்கள் 1ம் தபசில் சொத்துடன் உடன் இணைந்து செல்லவில்லை என்றால் சரிதான்.

7. 4ம் தபசில் சொத்தின் எல்கை மால் தவறாக உள்ளது என்றால் சரியல்ல.

8. நானும் என் மகன்களும் ஒன்றாக ஒற்றுமையாக உள்ளோம் என்றால் சரிதான்.

9. முத்துக்குமார் மட்டும் தனிக்குடித்தனம் நடத்தி வருகிறார். நானும், மகாராஜனும் ஒன்றாக வசித்து வருகிறோம். என் வீட்டிற்கு தென்புறம் உள்ள வீட்டில் முத்துக்குமார் வசித்து வருகிறார்.

10. என்னிடம் காண்பிக்கப்படுவது என் மகன் முத்துக்குமார் கிரையம் வாங்கிய கிரைய பத்திரம் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரம் பி.வா.சா.ஆ.1 ஆக வா.சா.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.

11. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தெற்கு பக்க எல்கை மால் ஆக குமாரசாமி மற்றும் முருகன் ஆகியோர் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. வா.சா.ஆ.1 ஆவணமானது எனக்கும் என் சகோதரர்களுக்கும் ஏற்பட்ட பாகபத்திரம் என்றால் சரிதான்.

13. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி பாக பத்திரத்தின் 1ம் தபசில் சொத்து என் அப்பா முத்துச்சாமிக்கு ஒதுக்கப்பட்டது. என் அப்பா ஆயுள் காலத்திற்கு பின்னிட்டு மேல்பாதி எனக்கும், கீழ்பாதி என் சகோதரர்

குமாரசாமியும் சமமாக பிரித்துக்கொள்ள வேண்டும் என வாசகம் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

14. பாக அட்டவணையின் 3ம் தபசில் சொத்து என் சகோதரர் குமாரசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

15. பாக அட்டவணையின் 4ம் தபசில் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

16. பாக அட்டவணையின் 5ம் தபசில் சொத்து என் சகோதரர் வெங்கடாசலத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை தான் வெங்கடாசலத்தின் வாரிசுகளிடம் இருந்து என் மகன் முத்துக்குமார் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

17. நான் எவ்வாறு பாக அட்டவணையின் 4ம் தபசில் சொத்தை 1993 வருடம் முதல் அனுபவிக்கிறேனோ அவ்வாறு தான் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கிய பாக அட்டவணையின் 3ம் தபசில் சொத்தை 1993 வருடம் முதல் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

18. பாக அட்டவணை எழுதிய 7 மாதங்களில் என் தகப்பனார் இறந்துவிட்டார். தேதி நினைவில்லை.

19. என் தகப்பனார் இறந்தபின் 1ம் தபசில் சொத்தை நானும், குமாரசாமியும் சம பாகமாக அனுபவம் செய்து வருகிறோம்.

20. சகோதரர்கள் அனைவரும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட தபசில் படி கண்ட அளவுகள் மற்றும் எல்கைக்குட்பட்டு அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான்.

21. வா.சா.ஆ.10 ஆவணம் எந்த சொத்திற்கு மின் சாதன பொருட்கள் வாங்கியது என குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான் மோட்டருக்காக வாங்கப்பட்டது.

22. என் வீடும், முத்துக்குமார் வீடும் ஒரே சுவற்றில் உள்ளது என்றால் சரியல்ல நடைபாதைக்கு தென்பக்கம் தான் முத்துக்குமார் சுவர் உள்ளது. என் வீட்டின் மாடி எப்போது கட்டப்பட்டது என்றால் 2000 வருடத்தில் கட்டப்பட்டது.

23. என் வீட்டு மாடிப்படிக்கு அடியில் நல்ல தண்ணீர் தொட்டியும் ஒரு கழிவறையும் உள்ளது என்றால் சரிதான்.

24. ஆணையர் வரைபடத்தில் GH என்ற இடத்தில் ஒரு கதவு உள்ளது என்றால் சரிதான் அந்த கதவு என் வீட்டு கழிவறைக்கு செல்லும் கதவு.

25. ஆணையர் வரைபடத்தில் G1G2G3 என காணப்பட்ட பகுதி கழிவறை என்றால் சரிதான். அந்த கழிவறை பகுதியில் ஒரு கதவு உள்ளது என்றால் சரிதான்.

26. கழிவறையை ஒட்டி கிழக்கே நல்ல தண்ணீர் தொட்டி உள்ளது என்றால் சரிதான்.

27. கழிவறை மற்றும் தண்ணீர் தொட்டிற்கு மேலே மாடிப்படி உள்ளது என்றால் சரிதான்.

28. ஆணையர் வரைபடத்தில் CDEF கடைப் பகுதி ஆகும். அந்த கடைப்பகுதியின் தெற்கே ஒரு ஜன்னலும், கதவும் உள்ளது என்றால் சரிதான். அந்த கதவு வழியாக கழிவறைக்கு செல்வேன்.

29. வா.சா.ஆ.1 பாக அட்டவணையில் பிராது 4ம் தபசில் சொத்து என்ற ஒரு சொத்து காண்பிக்கப்படவில்லை எனவும், நான் கூறும் 4ம் தபசில் சொத்து கற்பனையானது என்றால் சரியல்ல. இந்த விவரம் பி.வா.சா.ஆ.1 முத்துக்குமார் கிரைய ஆவணத்தில் துலங்கும் என்றால் சரியல்ல.

30. முதலில் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பில் 2 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக கூறிவிட்டு தற்போது 1.1/2 மட்டுமே ஆக்கிரமிப்பு செய்ததாக பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

31. ஆணையர் அறிக்கையின் படி பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தின் அளவு குறைவாக காட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை.

32. ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் அது என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

33. என் வழக்கானது என் சொத்திற்கு மேற்கு மற்றும் தெற்கு பக்கம் உள்ள நபர்களை அளவு மற்றும் எல்லை பிரச்சனை காரணமாக தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

34. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கிரையம் பெற்ற பின் என் மகன் தென்வடல் முடுக்கை தான் பயன்படுத்துவார் என்றால் சரிதான் நகராட்சி ரோட்டையும் பயன்படுத்துவார்.

35. என் வீட்டிற்கு வடக்கு பக்கம் தென்காசி– திருநெல்வேலி பிரதான சாலை உள்ளது என்றால் சரிதான். எனக்கு 2 பக்கமும் வழிபாதை உள்ள போது 4ம் தபசில் சொத்தை பொறுத்து நான் கோரும் வழிநடைபாதை அவசியமற்றது என்றும் பாக அட்டவணையில் நடைபாதையை காண்பிக்காததாலும், பி.வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நடைபாதையை காண்பிக்காததாலும், ஆணையர் அறிக்கையின் படி பிரதிவாதி வீட்டிற்கு அளவு குறைவாக இருப்பதாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ஆணையர் அறிக்கையின் படி நான் அமைத்த மின்மோட்டார் பிரதிவாதி இடத்தில் உள்ளது என்றால் சரியல்ல நடைபாதையில் உள்ளது.

36. நடைபாதை என ஒரு அமைப்பே இல்லை என்றும் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் குறைந்த விலைக்கு அவர் இடத்தை கேட்டதால் அவரை அலைக்கழிக்க வேண்டும் என வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என்னுடைய வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.